# சிறுவர் சீர்திருத்த பள்ளிகளை ஆய்வு செய்ய ஆணையம் அமைத்திடுக!

## வைகோ கோரிக்கை!!

மாலை முரசு
சென்னைப் பதிப்பு
18.01.2023



சென்னை, ஜன.18

மாநிலம் முழுவதும் உள்ளசிறுவர்சீர்திருத்தபள்ளிகளை கள ஆய்வு செய்திட ஆணையம் அமைத்திட வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தாம்பரம் கன்னடபாளையம் குப்பை மேடு பகுதியில் வசித்து வரும் கணவனை இழந்த கைம்பெண் திருமதி பிரியா. இவருக்கு ஆறு குழந்தைகள்உள்ளனர் உறவுகள் இல்லாத ஆதரவற்ற நிலையில்மூத்தமகன் கோகுல் ஸ்ரீ வயது 17 பத்தாம்வகுப்புவரைபடித்துள்ளார். சொந்த வீடு இல்லாததால் குடிநீர் ஏற்றும் லாரிகளை பார்த்துக்கொள்ளும் வாட்ச்மேன் பணி செய்துகொண்டுஅங்கேயே வசித்து வருகிறார்.

கணவர் பழனி 2019–ஆம் ஆண்டு இறந்த பின் குடும்ப பாரத்தை தானே சுமந்து மகன் கோகுல் ஸ்ரீ தொடர்ந்து படிக்க வைக்க முடியாதநிலையில்குன்றத்தூர்பெருந்துநிலையம்அருகில்உள்ளபொம்மைகடையில் வேலைக்கு சேர்ந்து உள்ளார்.

இந்தநிலையில் கடந்த 29.12.2022 அன்று நண்பர்களைபார்க்கசென்றுவிட்டு ரெயிலில்தாம்பரம் ரெயில் நிலையம் வந்துள்ளார். அப்போதுபணியில்இருந்த ரெயில்வே காவலர்கள் சந்தேகத்தின்பெயரில்பிடித்து விசாரித்து செங்கல்பட்டு சிறுவர்சீர்திருத்தபள்ளிக்கு அனுப்பியுள்ளார்கள்.

31.12.2022 மாலை 5 மணியளவில் கோகுல் ஸ்ரீ தாய் பிரியாவிற்கு செங்கல்பட்டுசிறுவர்சீர்திருத்தபள்ளியில் இருந்து போனில் அழைத்து உன் மகன் பூரி சாப்பிடும் போது வலிப்பு ஏற்பட்டது அதனால் செங்கல்பட்டுஅரசுபொதுமருத்துவமனை அழைத்து செல்கிறோம். விரைவில் வரச் சொல்லி உள்ளனர். சற்று நேரத்திற்குபிறகுஅதேநபர் உன் மகனை எமர்ஜென்சி வார்டில் சேர்த்துள்ளோம் என்று சொல்லி உள்ளார். பின்னர்அதேநபர்பத்துநிமிடம் இடைவெளியில் உன் மகன் இறந்து விட்டான் என்று தெரிவித்துள்ளார்.

இரவு 8 மணி அளவில் செங்கல்பட்டு மருத்துவமனை சென்று சிறுவனின் தாய் பிரியா மகனின் உடலை பார்க்க அனுமதிக்காமல் குழந்தைகள் நல பாதுகாப்புஅலுவலரின்உத்தரவின் பேரில் கட்டாயமாகசெங்கல்பட்டில்உள்ள ஒரு வீட்டில் அடைத்து வைத்து அவர் யாரிடமும் பேச விடாமல் செல்போனை பறிமுதல் செய்து வைத்துக்கொண்டனர்.

மறுநாள் 2023 ஜனவரி 1–ஆம் தேதி பகல்ஒருமணி அளவில் ஆட்டோவில் அழைத்துக்கொண்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனை பிணவறைக்கு கொண்டு சென்று இறந்த நிலையில் இருந்த கோகுல் ஸ்ரீயைகாட்டியுள்ளனர். கீழ் உதடு இரண்டாக கிழிந்து உடல் முழுவதும் கொடூர காயங்கள் இருந்துள்ளது. என்மகன்வலிப்புநோயால் இறக்கவில்லை. நீங்கள்சித்திரவதை செய்து அடித்து கொலை செய்துள்ளீர்கள் என்றுகண்ணீர்விட்டுகதறி அழுதுள்ளார். பின்னர் அங்கிருந்து அவரை மீண்டும் வலுக்கட்டாயமாக அவர் அடைத்து வைக்கப்பட்டிருந்த வீட்டிற்கு கொண்டு சென்று மீண்டும் அவரை வீட்டு காவலில் வைத்து 02.01.23 அன்று சீர்திருத்த பள்ளியின் அதிகாரி ஒருவர் வெள்ளைப் பேப்பரில் கையெழுத்து கேட்டு மிரட்டி உள்ளனர். இந்த கொடுமையான சூழலில் சத்தம் போட்டு வீட்டை விட்டுவெளியேறிசெங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவரை நேரில் சந்தித்து விஷயத்தை சொல்லி உள்ளார்அவரும்செங்கல்பட்டு நகர காவல் நிலையத்திற்கு தகவல்கொடுத்து வழக்குப்பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஜனவரி 3–ஆம் தேதி செங்கல்பட்டு முதன்மை குற்றவியல் நீதிபதி முன்பு மருத்துவர்கள் சிறுவன் கோகுல் ஸ்ரீ உடலை உடற்கூராய்வுசெய்யப்பட்டுபின்னர்மேல்கூறாய்வுக்குகிண்டியில் உள்ள கிங் மருத்துவ இன்ஸ்டிட்யூட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டு இதில் இரண்டு மருத்துவ அறிக்கையிலும் சிறுவன் கோகுல் ஸ்ரீ கொடூரமாக அடித்துசித்திரவதைசெய்து கொலை செய்யப்பட்டுள்ளார் என்ற அறிக்கை கொடுத்த பின் செங்கல்பட்டு நகர காவல் துறை இதை கொலை வழக்காக மாற்றி லாக்கப் சித்ரவதை கொலையில் சம்பந்தப்பட்ட செங்கல்பட்டு சிறுவர்சீர்திருத்தபள்ளிகண்காணிப்பாளர் மோகன், துணை கண்காணிப்பாளர் நித்தியானந்தம்காவலர்கள் சரண்ராஜ், ஆனந்தராஜ், விஜயகுமார், சந்திரபாபு ஆகிய ஆறு பேரை கைது செய்துசிறையில்அடைத்து உள்ளனர். இதில் பாரபட்சமற்ற நடவடிக்கைஎடுத்து குற்றவாளிகளை கைது செய்துசிறையில்அடைத்த தமிழக காவல்துறை பணி பாராட்டுக்குரியது.

இந்த வழக்கை சட்டம்–ஒழுங்கு காவல்துறையிலிருந்து சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றி அபலைப் பெண்பிரியாசட்டவிரோதமாக அடைத்து வைத்து வெள்ளைத்தாளில்கையெழுத்து கேட்டு மிரட்டியவர்களின் மீதும் நடவடிக்கைஎடுக்கவேண்டும் கணவனை இழந்து ஐந்து பிள்ளைகளுடன்ஆதரவற்றநிலையில்உள்ளவிதவைத் தாய் பிரியாவிற்கு தகுந்த பாதுகாப்பும் அவரின் தகுதிக்கு ஏற்ப அரசு வேலைவாய்ப்பும் நிவாரணமும் வழங்கி வழக்கை விரைந்து விசாரித்து குற்றவாளிக்குதகுந்ததண்டனை பெற்றுத்தரவும் தமிழ்நாடு முழுவதும் உள்ள சிறுவர் சீர்திருத்த பள்ளிகளை கலாய்வுசெய்யஆணையம் அமைத்து தகுந்த நடவடிக்கை எடுக்கவும் தமுதலமைச்சர் மு.க .ஸ்டாலின் தலைமையிலான அரசை ம.தி.மு.க. சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு வைகோ கூறியுள்ளார்.